வருவாய் நிருவாகம் மற்றும்
பேரிடர் மேலாண்மை ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை – 5.

கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின்
செயல்முறைகள்
முன்னிலை: திரு.க.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப.,

செ.மு.ஆ.எண். ஆ.கு. 4/42932/2019 நாள்.09.09.2021.

பொருள்:- கருணை அடிப்படையில் பணி நியமனம் – இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலகு – மண்டபம் முகாம் தனித்துணை ஆட்சியர் (ம.வா) அலுவலகம் – தனி வருவாய் ஆய்வாளராகப் பணியாற்றி, பணியிடையே 28.08.2015 அன்று காலஞ்சென்ற திரு.கஜேந்திரன் என்பவரின் மகன் திரு.ஜெயபாலவெங்கடேசன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டது – பணி வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை:-
1. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள். ந.க.அ3/47147/2015, நாள். 29.07.2016.
2. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் கடித எண்.ந.க.அ3/47147/2015, நாள்.29.10.2019.
3. இவ்வலுவலக கடித எண்.ஆ.கு.4/42932/2019, நாள்.14.09.2020.
4. அரசுக் கடித எண்.24579/பணி9(2)/2020–3, நாள்.21.04.2021.
5. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்.26.02.2021.
6. அரசுக் கடித எண்.9694/பணி9(2)/2021–3, நாள்.28.06.2021.

*******

ஆணை:

இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலகு, மண்டபம் முகாம் தனித்துணை ஆட்சியர் (ம.வா) அலுவலகம், தனி வருவாய் ஆய்வாளராகப் பணியாற்றி, பணியிடையே 28.08.2015 அன்று காலஞ்சென்ற திரு.கஜேந்திரன் என்பவரின் மகன் திரு.ஜெயபாலவெங்கடேசன் என்பவருக்கு பார்வை–1 ல் காணும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகளின்படி, கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு 02.08.2016 முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

2) பார்வை –5ல் காணும் அரசாணை மற்றும் பார்வை –6ல் காணும் அரசுக் கடிதத்தில், 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்த வித விதித்தளர்வும் தேவைப்படாத பணியாளர்களுக்கு

Scanned with CamScanner

சம்பந்தப்பட்ட பணிநியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை வெளியிட்டு தொடர்புடைய அரசுப்பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) எனவே, மேற்படி அரசாணை மற்றும் அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணைகளுக்கிணங்க, திரு.ஜெயபாலவெங்கடேசன் என்பவருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணியில் சேர்ந்த நாளான 02.08.2016 முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணி வரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது. மேலும், தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒம்/– க.பணீந்திர ரெட்டி,
கூடுதல் தலைமைச் செயலர் /
வருவாய் நிருவாக ஆணையர்.

பெறுநர்:
திரு.ஜெயபாலவெங்கடேசன்,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
இராமநாதபுரம் மாவட்டம்.
(மாவட்ட ஆட்சியர் மூலமாக சார்வு செய்ய)
(By speed)

நகல்:
1. மாவட்ட ஆட்சியர்
இராமநாதபுரம் மாவட்டம். (தக்க பதிவுகள் மேற்கொள்ள)
2. இருப்புக் கோப்பு.
3. அரசு முதன்மைச் செயலர்,
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (பணி–9) துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.

உதவி ஆணையர்–4,
கூடுதல் தலைமை செயலர்/
வருவாய் நிருவாக ஆணையருக்காக

13/9/2021

Scanned with CamScanner